பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை

08 07 2025 **TUESDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் திரு **Luiz Inacio Lula Silva**-வுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.
2. டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உலகின் சக்திவாய்ந்த மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறியுள்ளார்.
3. திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் இம்மாதம் 14-ஆம் தேதி குடமுழுக்கு விழா நடைபெறும் என்று மாநில அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் திரு **Luiz Inacio Lula Silva**-வுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

இந்த சந்திப்பின்போது, இந்தியா — பிரேசில் இடையே வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, விண்வெளி, தொழில்நுட்பம், விவசாயம், சுகாதாரம் மற்றும் மக்கள் தொடர்பு உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து, இருநாடுகளுக்கும் இடையே நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, சமூக வலைதளத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், அந்நாட்டு இசைக்குழு அளித்த வரவேற்பு ஆப்பிரிக்கா — பிரேசில் இடையேயான நட்புறவை எடுத்துக்காட்டும் வகையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் பிரேசில் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் இறுதிக்கட்டமாக நாளை நமீபியா செல்கிறார்.

இந்த பயணத்தின்போது, கச்சா எண்ணெய், எரிவாயு, ஹைட்ரோ கார்பன், அரியவகை கனிமங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>**

கார்பன் வெளியேற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

ஃபரிதாபாத் - நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்கான விரைவு வழிச்சாலை மற்றும் அன்னையின் பெயரில் மரக்கன்று நடும் திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நாடு முழுவதிலும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு தேசிய நெடுஞ்சாலைகளில் 60 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், 67 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில், போக்குவரத்துத்துறைக்கு கூடுதல் பொறுப்புணர்வு இருப்பதை கருத்தில்கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

<<<<<>>>>>

டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உலகின் சக்திவாய்ந்த மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தொழில்நுட்பத்துறையில் முதலீடுகளுக்கு இந்தியாவில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தொழில்நுட்பத்துறையில் முதலீடுகளுக்கு உகந்த நாடாக இந்தியா இருப்பதால், வெளிநாட்டு நிறுவனங்கள் இதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

**CISCO** நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு **Chuck Robbins** மற்றும் நிறுவன பிரதிநிதிகளை சந்தித்து பேசியது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

கடலூர் மாவட்டம் செம்மங்குப்பம் பகுதியில் ரயில்வே கேட்டை கடக்க முயன்ற பள்ளி வாகனத்தின் மீது ரயில் மோதி ஏற்பட்ட விபத்தில் மூன்று குழந்தைகள் உயிரிழந்ததற்கு மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக, பணியில் இருந்த லெவல் கிராசிங் காவலாளி கைது செய்யப்பட்டு, அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

இந்த பகுதியில் ரயில்வே சார்பில், நிதி ஒதுக்கீடு செய்து சுரங்கப்பாதை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், கடந்த ஓராண்டாக அம்மாவட்ட ஆட்சியரிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை என்றும் தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள கோயில்கள் அதன் தொன்மை மாறாமல் சீரமைக்கப்பட்டு வருவதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் குடமுழுக்கு விழாவிற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இக்கோவிலில் இம்மாதம் 14-ஆம் தேதி குடமுழுக்கு விழா நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

ஆயிரத்து 200 ஆண்டுகால பழமை வாய்ந்த இந்த திருக்கோவிலில் பக்தர்கள் தங்கும் விடுதி, திருமண மண்டபம் உள்ளிட்ட பல்வேறு திருப்பணிகள் 22 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் இதுவரை 114 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு விழா நடத்தப்பட்டுள்ளதாக திரு சேகர்பாபு தெரிவித்தார்.

<<<<<>>>>>

போதைப்பொருள் பயன்பாடு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக கோவை மண்டல காவல்துறை தலைவர் திரு செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவல் நிலையங்களுக்கு தேவையின்றி பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களை விசாரணைக்கு அழைத்துச் செல்லக்கூடாது என்று காவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனிடையே, மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து நான்காவது நாளாக அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

இந்நிலையில், அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 35 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>

<u>மாவட்டச் செய்திகள்</u>

திருப்போரூரை அடுத்த தையூரில் உள்ள ஐ ஐ டி மெட்ராஸ் டிஸ்கவரி வளாகத்தில் 180 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள அதிநவீன பசுமை ஹைட்ரஜன் ஆராய்ச்சி மைய வடிவமைப்பை மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா திறந்துவைத்தார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்களின் ஓய்வூதியம் தொடர்பான குறைதீர்ப்பு முகாம் வரும் 10-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

----------------

நாமக்கல் மாவட்டத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிரிவை சேர்ந்த மக்கள் தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான தனி நபர் கடன் மற்றும் குழுக்கடன் பெற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

--------------------

தருமபுரியில் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின்மூலம், இன்று முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களுக்கான கல்லூரிச்சந்தையை ஆட்சியர் திரு சதீஸ் இன்று தொடங்கிவைத்தார்.

------------------

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகே கட்டிடத்தின் மீது கார் மோதி ஏற்பட்ட விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **‘Sahaja Yamalapalli ’** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-2 என்ற செட் கணக்கில், கனடாவின் **‘Katherine Sebov’**-வை வென்றார்.

--------

உலகக்கோப்பை தகுதிச்சுற்று வில்வித்தை இறுதிக்கட்ட போட்டிகள் ஸ்பெயினில் இன்று தொடங்குகிறது.
மேட்ரிட்டில் நடைபெறும் இப்போட்டியில், 16 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது.
இம்மாதம் 13-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் 49 நாடுகளை சேர்ந்த 336 வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

இதில் வெற்றிபெறும் வீரர்கள், சீனாவின் **Nanging** நகரில் அக்டோபர் மாதம் நடைபெறும் உலகக்கோப்பை வில்வித்தை இறுதிப்போட்டியில் பங்கேற்க தகுதிபெறுவர்

**<<<<<END>>>>>**